மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 12/2017

பெயர் – வேலுச்சாமி (பி.வா.சா.2)

நாள் – 11.03.2024

வாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

வாதி என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி சொல்லியுள்ள சர்வே எண் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை நான் எந்த தேதியில் கிரையம் பெற்றதாக சொல்கிறேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. 2008ம் ஆண்டு கிரையம் பெற்றேன். நான் பெற்ற கிரையம் மோசடியானது என்பதால் தான் எனது கிரைய முன்பாத்தியஸ்தர்கள் பெற்ற சான்றிதழான பி.வா.சா.ஆ.1 ஆவணம் மற்றும் எனது கிரைய ஆவணமான பி.வா.சா.ஆ.10ம் முன்னுக்குப்பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.169/1 ஏ, 11–க்கான புது சர்வே எண்.169/1 ஏ, 11 ஏ என்றாலும், அதில் உள்ளது ஒரு ஏக்கர் 33 செண்ட் நிலத்திற்கும் எனது கிரைய முன்பாத்தியஸ்தருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது என்றாலும் சரியல்ல. மேற்படி சொத்துக்களை எனது கிரைய முன்பாத்தியஸ்தர் நீதிமன்ற ஏலம் மூலம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 ஆன எனது கிரைய ஆவணம் மோசடியானது என்பதால் தான் பி.வா.சா.ஆ.10 பற்றி எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குறுதியில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் முன்னுக்குப்பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள ஒரு ஏக்கர் 33 செண்ட் சொத்து நிலம் எனது கிரைய முன்பாத்தியஸ்தருக்கு எக்காலத்திலும் பாததியமோ, அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. முறையற்ற உரிமையாளரிடமிருந்து நான் பெற்ற பி.வா.சா.ஆ.10 ஆவணம் சட்டப்படி செல்லத்தகாத ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் ரத்து செய்யத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்தான ஒரு ஏக்கர் 33 செண்ட் நிலத்திற்கான அனுபவம் தற்போது வரை வாதிகள் வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தை மோசடி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு 1 முதல் 9 பிரதிவாதிகளோடு நயவஞ்சக கூட்டு சேர்ந்து பி.வா.சா.ஆ.10 ஆவணத்தை 11ம் பிரதிவாதி அலுவலகத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

11, 12 பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணை

25.09.2008ம் தேதி 1 முதல் 8 வரையான பிரதிவாதிகளிடமிருந்து கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். கிரையம் செய்யும்போது முறையாக அரசு பதிவுத்துறையில் சட்ட திட்ட விதிகளின்படி அரசு வழிகாட்டி மதிப்பு அரசு ஆவணங்கள், மூல கிரைய ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்துக்கான பட்டா என் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.